2016 ஜூலை 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மாநிலத்தின் எரிசக்தித் துறையில் இத்தகைய பெரும் மாற்றம் சாத்தியமானது. (மேசையைத் தட்டும் ஒலி)

67. பன்னாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து கடனுதவி பெறும் திட்டங்களின் வாயிலாக, மாநிலத்திலுள்ள மின்கடவுப் பாதைகள் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன. ஜெர்மன் வங்கி உதவியுடன் பசுமை ஆற்றல் மின்தொடர் திட்டம் 1,593 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 5,014 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு மின்தொடரமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறப்பாக நடைபெற்று வரும் இத்திட்டங்களுக்காக, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,738 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

68. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 191 இலட்சம் நுகர்வோர்கள் பயன்பெறும் வகையில், அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட்டுகள் வரை (மேசையைத் தட்டும் ஒலி) கட்டணமில்லா மின்சாரம் வழங்கி தமது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அறிவிப்பின்மூலம், அரசுக்கு ஆண்டுதோறும் 1,607 கோடி ரூபாய் அளவிற்கு கூடுதல் நிதிச் சுமை ஏற்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளித்த வாக்குறுதியின்படி கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கட்டணமில்லா மின்சாரம், முறையே, 200 யூனிட்டுகள் மற்றும் 750 யூனிட்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மின்சாரத்திற்கான மானியத்திற்கு மட்டும் நடப்பு நிதியாண்டில் 9,007 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) நிதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் (TANGEDCO) கடனை அரசு ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து, அதைத் திரும்பச் செலுத்துவதற்காக, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் எரிசக்தித் துறைக்கு 13,856 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)